13 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கு டிசம்பர் 2014 ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay Authorization for the month of December 2014)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை–600 009

கடித எண். 42133 /பக5(1)/2014–1, நாள் 29.12.2014

அனுப்புநர்
திருமதி த.சபிதா இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாவட்டக் கருவூல/ சார் கருவூல அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – 2006–07, 2007–08 மற்றும் 2008–09 ஆம் கல்வியாண்டுகளில் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரைப் பிரித்து துவக்கப்பட்ட அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 13 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் – 01.06.2014 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு ஆணை கோரி கருத்துரு பெறப்பட்டுள்ளது – டிசம்பர் 2014ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்க அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல் – சார்ந்து.

பார்வை
1. அரசாணை (1டி) எண்.242, பள்ளிக் கல்வி (இ1) துறை, நாள் 30.08.2011.
2. அரசுக் கடித எண். 35363/பக5(1)/ 2014, நாள்.30.10.2014.
3. அரசுக் கடித எண். 36595/பக5(1)/ 2014, நாள்.25.11.2014.
4. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 033245/எல்3/2014 நாள் 18.12.2014

------

பார்வை 1ல் காணும் அரசாணையில், 2006–07, 2007–08 மற்றும் 2008–09ஆம் கல்வி ஆண்டுகளில் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து, மகளிரைப் பிரித்து துவங்கப்பட்ட 13 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு 13 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் புதிதாக தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டு, அப்பணியிடங்களுக்கு 31.05.2014 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் தற்காலிக பணியிடங்களுக்கு 01.06.2014 முதல்

மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த கருத்துரு பள்ளிக் கல்வி இயக்குநரால் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

2. மேற்காணும், 13 உயர்நிலைப் பள்ளி தற்காலிக தலைமையாசிரியர் பணியிடங்களுக்கு 01.06.2014 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கிட காலதாமதம் ஏற்படும் நிலையில், துறைத்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஜுன், ஜுலை, ஆகஸ்ட் ஆகிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெறத்தக்க வகையில் பள்ளிக் கல்வி இயக்குநரால் விரைவு ஊதிய ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், பார்வை இரண்டு மற்றும் மூன்றில் காணும் அரசுக் கடிதங்களில் மேற்குறிப்பிட்ட 13 தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கு செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் 2014ஆம் மாதத்திற்கு ஊதியம் பெற அதிகார ஆணை அரசால் வழங்கப்பட்டுள்ளது. தற்போது டிசம்பர் 2014ஆம் மாதத்திற்கான ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க அதிகார ஆணை (Pay Authorization)வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசினை வேண்டியுள்ளார்.

3. தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளதால், பணியிட தொடர் நீட்டிப்பினை எதிர்நோக்கி, 13 உயர்நிலைப் பள்ளி தற்காலிக தலைமையாசிரியர் பணியிடங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியம், உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும்பட்சத்தில் டிசம்பர் 2014ஆம் மாதத்திற்கான சம்பளப் பட்டிகளை அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

4. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண். 72341/Edn-II/2014, நாள்: 29.12.2014–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

29/12/14

அரசு முதன்மைச் செயலாளருக்காக

29/12

**நகல்**

மாநிலக் கணக்காயர், சென்னை–18.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6
நிதி(கல்வி–II)துறை , சென்னை–9,
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

ந.க.எண் 033245/எல்/இ3 நாள் 31.12.2014.

நகல் - அனுப்பப்படுகிறது.

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள்

Director of School Education
Chennai - 600 006.

31/12/2014